**பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டம் - 2018**

---

பதுளை - செங்கல்லடி வீதி முன்னேற்ற செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் மற்றும் அபிவிருத்திக்கான சவுதி நிதியம் ஆகியவற்றிற்கிடையே கைச்சாத்திடப்பட்ட 2015 யூன் 26 மற்றும் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 1661 பி மற்றும் 10/639 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பேராதனிய - பதுளை - செங்கலடி வீதியின் பதுளையிலிருந்து செங்கலடி வரையிலான வீதியின் 147 கிலோமீற்றர்களை புனரமைப்பதன் மூலம் பிராந்தியத்தில் போக்குவரத்தை முன்னேற்றுவதற்குப் பொருளாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கும் ஏற்ற வகையில் ஊவா மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தின் இணைப்பை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,200 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 140 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி யூஎஸ்.டொலர் 20 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2019 மார்ச் அளவில் பூர்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீதான இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீதான தாமதத்தின் மீதாக செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 29.80 மில்லியன் தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | இவ்விடயம் 2019 திசெம்பர் 31 இன் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் 08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| உருப்படி | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| வீதிகளின் புனர் நிர்மானம். | பதுளை தொடக்கம் பிபில வரையான வீதியின் புனர்நிர்மான வேலைகளின் பௌதீக செயலாற்றல் வேலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 03 வருடங்கள் கழிந்தும் கூட 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 21 சதவீதம் தொடக்கம் 46 சதவீதம் எனும் வீச்சுக்குள் காணப்பட்டது. | நிர்மான வேலைகளின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதம் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | செயற்திட்ட பூர்த்தியாக்கல் நேரத்தை அதிகரிக்க கூடியமை கால நீடிப்பிற்கான அனுமதியில் தங்கியுள்ளது. | நேரஇலக்கினை அடந்துகொள்ளவும் கிரய அதிகரிப்பு மற்றும் ஒப்பந்த கால எல்லை நீடிப்பு என்பவற்றை தவிர்க்கவும் ஒப்பந்ததாரர் மீது ஆதிக்கம் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்தின் ஆலோசகர் லுனுகல தொடக்கம் பிபில வரையான வீதியின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்நதாரரின் மந்தகதியான செயலாற்றல் மீது தொடர்ச்சியாக கருத்துரைகளை வழங்கியிருந்த போதிலும், ஒப்பந்த பொது நிபந்தனையின் பிரிவு 15.2 இன் பிரகாரம் எவ்வித மாற்று நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை. | செயற்திட்டத்தின் மொத்த கிரயம் அதிகரிக்கலாம் மேலும் செயற்திட்ட பூர்த்தியாக்கலின் தேவையற்ற தாமதம். | ஆரம்பகட்ட நடவடிக்கையாக ஒப்பந்த பொது நிபந்தனை 15.1 இன் பிரகாரம் முடிவுறுத்தல் செயற்பாட்டின் கீழ் ஒஎப்ஐடி பொதி 03 ஒப்பந்ததாரரினால் திருத்துவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் நிலைமையை மதிப்பாய்வு செய்ய அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஆலோசகர், ஒப்பந்ததாரர் மற்றும் வேலைக்கமர்த்துபவர் என்பவர்களுடன் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | நிர்மானத்தை முடிவுறுத்தவோ அல்லது துரிதப்படுத்தவோ தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | மொத்தமாக ரூபா 368 மில்லியன் மின்சாரம், நீர்வழங்கள் குழாய்கள் மற்றும் பல போன்ற பாவனை சேவைகளை மாற்றுவதற்காக உரிய வேலைகளிற்கு ஒருமுறை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது உரிய நேரத்தில் செய்து முடிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையற்ற கிரயம் மற்றும் நேரம் செலவிடப்படும் மேலும் செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிக்கலாம். | பாவனைகளை அகற்றுவதனை துரிதப்படுத்த, ஒப்பந்தத்தை வழங்க முன்னர் பாவனை முகவர்களிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உரிய நெரத்தில் வேலைகளை பூர்த்திசெய்ய உரிய தரப்பினர்களிடமிருந்து முறையான நேர திட்டம் ஒன்று காணப்படல் வேண்டும். |
| (iii) | செயலாற்றல் உத்தரவாதத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிற்கு அனுமதிப்பதனூடாக வீதி புனர்நிர்மான வேலைகள் மீதான அளவைப்பட்டியலில் வெவ்வேறான கொடுப்பனவு உருப்படிகள் செய்யப்பட்டிருந்தமை, உரிய ஒப்பந்ததாரரின் செலவில் செயலாற்றல் பாதுகாப்பினை பெறுவதற்கான ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழான ஏற்பாடுகளிற்கு முரனாக காணப்பட்டது. அதன்படி, மொத்தமாக ரூபா 80 மில்லியன் ஒப்பந்ததாரரினால் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெற்றுக்கொள்ள ஏற்பட்ட கிரயத்தினை மீட்பதற்காக ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர்களிற்கு தகாத நன்மைகள். | ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டு காணப்படுகின்ற, செயலாற்றல் பிணையொன்றை ஒப்பந்ததாரர் (அவரின் செலவில்) பெற்றுக்கொள்வார் என பொதுவான ஒப்பந்த நிபந்தனையில் பாதுகாப்பு பிணையின் கீழ் (4.2) கூற்றின் பிரகாரம் குறிப்பிடப்படுகின்றதுடன், மேற்குறிப்பிடப்பட்ட வகைகளினை தனித்தனியாக விலையிட வேண்டுமென ஒப்பந்ததாரர் வேண்டப்படுகின்ற அதேவேளை, அந்த ஒப்பந்த உடன்படிக்கை அளவைப் பட்டியலினைக் (BOQ) கொண்டிருக்கவேண்டும். ஏவ்வாறாயினும், ஒப்பந்த நிபந்மனைகளின் பிரகாரம், ஒப்பந்த ஆவணங்களின் தொகுதிக்கிடையே முன்னுரிமையான ஆவணங்கள், ஒப்பந்த நிபந்தனைகள் கூற்றில் | மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (4.2) வழங்கப்பட்ட பொதுவான கூற்று, அளவைப் பட்டியல் (BOC) ஏற்பாட்டின் கீழ் ஊழியறினால் அவ்வாறு செய்யப்படவேண்டுமென ஒப்பந்ததாரரினால் வேண்டப்பட்டவைகள் மற்றும் வகைகளினை உரிமைக்கோரிக்கை செய்வதற்கான ஒப்பந்ததாரரின் உரிமைகள் கூட புறக்கணிக்கப்பட்டிருந்தது. | |
| (iv) | ஒப்பந்தத்தின் தனிப்பட்ட நிபந்தனைகளின் உப பிரிவு 14.6 இன் பிரகாரம், செய்யப்பட்ட வேலைக்கான அத்தாட்சிக்கான ஒரு இடைக்கால கொடுப்பனவுப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த தொகையில் 2 சதவீதத்திற்கு அதிகமாக காணப்படல் வேண்டும். ரூபா 35 மில்லியன் தொடக்கம் ரூபா 52 மில்லியன் வரையான தொகையுடய வீச்சிலாக செய்யப்பட்ட ஐபிசி கொடுப்பனவுகள் ஐந்து நிகழ்வுகளில் அவதானிக்கப்பட்டிருந்தமை அதற்கு முரனாக காணப்பட்டது. | இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் மதிப்பீடு மிதான கிரயத்தின் வரம்புமீறல். | ஐபிசி இன் குறைந்தபட்ச தொகையின் கீழ் புனையப்பட்ட நிபந்தனை, வேலைகளின் செயலாற்றலின் விகிதம் மற்றும் பொறியியலாளர் பரிந்துறைகள் போன்றன உள்ளடங்களான பல்வேறு காரணிகளுக்குள் பார்க்கும் போது தளர்வாக காணப்பட்டது.<br><br>ஓப்பந்ததாரர் பொறியியலாலரிற்கு ஐபிசி இன் தொகைக்கு சம்பந்தமில்லாத மாதாந்த ஐபிசிகளை சமர்ப்பிக்கினறார், பிறகு பொறியியலாளர் அதனை வைத்துக்கொண்டு கொடுப்பனவிற்கான குறைந்தபட்ச பெறுமதியை அடைவதற்கு ஒட்டு மொத்த ஐபிசிகளாக வேலை வழங்குனரிற்கு அனுப்புகின்றார். | கிரயம், நேரம் மற்றும் ஒப்பந்ததாரர்களிற்கான தேவையற்ற ஆனுகூலம் போன்றவற்றை குறைப்பதற்கு ஒப்பந்த நிபந்தனைகளிள் ஒப்புதலளிக்கப்பட்ட ஆரம்ப நிலையுடன் கடைபிடிக்கப்படல் வேண்டும். |
| (v) | கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 2,322 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 5,612 | கொடுப்பனவுகளை கொடுத்து தீர்ப்பதில் காணப்பட்ட தாமதம் காரணமாக | 38 (அ) வர்த்தமானி அறிவுறுத்தல்கள் 2012 ஜூன் தொடக்கம் 2016 மார்ச் வரை வெவ்வேறு | இழப்பீட்டு கொடுப்பனவுகளை கொடுத்து தீர்ப்பதற்கும் அதன் மீதான மேலதிக |

| | | | |
|---|---|---|---|
| காணித்துண்டகளை வீதி புனர்நிர்மான வேலைக்காக செயற்திட்த்தினால் சுவீகரிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 231 காணித்துண்டுகளுடன் தொடர்புபட்ட ரூபா 135 மில்லியன் தொகையான இழப்பீட்டு கொடுப்பனவுகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருந்தது. | இழப்பீடுகள் மீதான வட்டி கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | பிரிவுகளிற்காக 20 தடவைகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் இழப்பீட்டு கொடுப்பனவுகள் 2017 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | கிரயங்களை தவிர்ப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |